[27th April 1959

Sri A. VEDARATHNAM: கடலை உற்பத்தி செய்கிறவர்களும் விவசாயிகள், நெல் உற்பத்தி செய்கிறவர்களும் விவசாயிகள் என்றாலும் இந்த இரண்டு பேர்களிலும் யாருக்கு சர்க்கார் சலுகை கொடுப்பது அவசியம் என்று கருதுகிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: சலுகை கொடுப்பது என்றால் அவரவர்களுக்கு ஏற்றவாறு இரண்டு சாரார்களுக்கும் தான் கொடுக்கவேண்டும்.

Manavari paddy cultivation

* 175 *Q.*—Sri A. VEDARATHNAM (on behalf of Sri K. R. NALLASIVAM): கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்திலுள்ள சர்க்கார் விவசாயப் பண்ணைகளில் மானாவாரி நெல் சாகுபடி முறை பரீட்சிக்கப்படுகிறதா ?

(ஆ) அப்படியானால், ஏக்கருக்கு சாராசரி எத்தனை பவுண்ட் விளைகிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) The answer is in the affirmative.

(*b*) During the year 1958–59, an average yield of 935 lb. of paddy per acre was obtained at the Paddy Breeding Station, Coimbatore, and 624 lb. per acre at the Rice Research Station, Tirurkuppam.

Sri A. VEDARATHNAM: மானாவாரி நஞ்சைக்கு எந்த ரக விதை நல்லது என்று விவசாய இலாகா தீர்மானித்திருக்கிறது ? அந்த ரக விதையை அதிகம் உற்பத்தி செய்து விநியோகிக்க சர்க்கார் எடுத்திருக்கும்படியான நடவடிக்கை என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இப்போது 25 ரக விதைகள் பொருக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் மேலும் ஆராய்ச்சி செய்து கொண்டு வருகிறார்கள். மேலும் எந்த விதை சிறந்தது என்பது ஆராய்ச்சியின் முடிவில் தெரியும்.

Sri V. SUBBIAH: மானாவாரி மேட்டுப் பிரதேசத்தில் மழை குறைவாக, தண்ணீர் குறைவாக உள்ள ஒரு இடத்தில் ஏதோ ஒரு ரக விதை சிறந்ததாக இருக்கிறது என்று சொல்லப்பட்டதே ? அது பரீட்சார்த்தமாக எப்படி இருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அதைப்பற்றி ஒரு தனிக் கேள்வி போடவேண்டும்.

Scholarships to Harijan students.

*176 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ல் சென்னை ராஜ்ஜியத்திலிருக்கும் ஹரிஜன மாணவர்கள் மாணவிகளுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுவதற்காக மத்திய சர்க்காரால் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) அத்தொகையானது எந்தத் தேதியிலே சென்னை சர்க்காருக்குக் கிடைத்தது ?